## பா.ஜ.க. ஆளும் வடமாநிலங்களில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பு!

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பாக வாழ்கிறார்கள்!

## தேசிய குற்ற ஆவணக்காப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையே சாட்சி!

**சென்னை, ஏப். 14-**

**திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பாக வாழ்கிறார்கள். பி.ஜே.பி. ஆளும் உத்தரப்பிரதேசம், மகாராட்டிரம், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் முதலிய மாநிலங்களில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகம். தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையே சாட்சி.**

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் 2023ஆம் ஆண்டில் தேசிய அளவில் பெண்களுக்கு எதிராக நடைபெற்ற குற்றங்கள் குறித்த புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது. அந்த புள்ளி விவரங்கள்படி தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிராக நடைபெற்ற குற்றங்கள் மிகவும் குறைவாகும்.

அதாவது தமிழ்நாட்டில் 8,943 மட்டுமே.

ஆனால், பி.ஜே.பி. ஆட்சி செய்கின்ற மாநிலங்களில் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டைவிட பல மடங்கு அதிகமாகும் என்பதை இந்த தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது. அந்த அறிக்கையின்படி,

உத்திரப் பிரதேசமாநிலத்தில் 66,381 பெண்கள் பாதிக்கப்பட்டனர்.

மகாராட்டிர மாநிலத்தில் 47,101பெண்கள் பாதிக்கப்பட்டனர்.


ராஜஸ்தான் மாநிலத்தில் 45,450 பெண்கள் பாதிக்கப்பட்டனர்.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் 32,342 பெண்கள் பாதிக்கப்பட்டனர்.

ஒடிசா மாநிலத்தில் 25,914 பெண்கள் பாதிக்கப்பட்டனர்.

பிஹார் மாநிலத்தில் 22,962 பெண்கள் பாதிக்கப்பட்டனர்.

ஹரியானா மாநிலத்தில் 15,758 பெண்கள் பாதிக்கப்பட்டனர்.




தமிழ்நாட்டைவிட பி.ஜே.பி. ஆளுகின்ற மாநிலங்களில் எல்லாம் பெண்களுக்கு அதிக அளவில் குற்றங்கள் இழைக்கப்பட்டு, பெண்கள் சமுதாயம் பாதுகாப்பின்றி உள்ளது என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் தெளிவாகச் சொல்லுகின்றன.

2016 முதல் 2018 வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பெண்களுக்கு அவர்கள் கட்சியினரே இழைத்த படுபாதகச் செயல்களை மறைத்துவிட்டு பேசுகிறார்கள். அந்த அதிமுக ஆட்சியில் கல்லூரி மாணவிகள், குடும்பப் பெண்கள், என 200 க்கும் மேற்பட்ட பெண்களுக்கு எதிராக குற்றங்கள் மிக அதிக அளவில் நிகழ்ந்தன. அதை பத்திரிகைகள் எல்லாம் வெளிப்படுத்திய நிலையில், அந்தக் குற்றவாளிகளை எல்லாம் காப்பாற்ற முயற்சி செய்த எடப்பாடி பழனிசாமிக்கு மனச்சாட்சி என்பதே இல்லையா? அந்தச் சம்பவத்தில் 9 குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் சாகும் வரை ஆயுள்தண்டனை அளித்ததே மறந்துவிட்டார்களா ? இவைபோல, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்து பெண்களுக்கு எதிரான கொடுமைகளை மறைத்துவிட்டு, தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என கூறுவது மனச்சாட்சி அற்றவர்கள் அவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது அல்லவா ?

இவைபோல இன்னும் எத்தனையோ உண்டு. சொன்னால் பட்டியல் நீளும்! இது தமிழ்நாட்டு மக்களுக்குச் சிறு நினைவூட்டல்தான்!

பி.ஜே.பி. – அ.தி.மு.க. கூட்டணியினர், அவர்கள் ஆட்சிக் காலங்களில் பெண்களுக்கு எதிராக இழைத்த கொடுமைகளை தமிழ்நாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள்.

---

### பல்வேறு துறைகளில்


## தேசிய சராசரியை விட தமிழ்நாடு முன்னணியில் உள்ளது!

### ‘தி இந்து’ நாளேடு சிறப்புக் கட்டுரை!

**சென்னை, ஏப். 14-**

**தேசிய சராசரியை விட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளதாக ‘தி இந்து’ நாளேடு (13.04.2026) சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது.**

அது வருமாறு:-



தமிழ்நாட்டில் ஏப்ரல் 23 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து அரசியல் கட்சிகள் பல வாக்குறுதிகளை அளித்துள்ளன; அவற்றில் பல, பெண்கள் மற்றும் கல்வியை மையமாகக் கொண்டுள்ளன. தற்போதைய நிலையில், பொருளாதாரம், கல்வி மற்றும் பெண்கள் தொடர்பான பல குறியீடுகளில்தமிழ்நாடுமாநிலம்முன்னணியில் இருக்கிறது என்பதை குறியீடுகள் அடிப்படையிலான பகுப்பாய்வு காட்டுகிறது.

முதலாவதாக, தமிழ்நாடு 2023ஆம் ஆண்டில் தேசிய சராசரியை விட அதிகமான 0.787 என்ற மனித மேம்பாட்டுக் குறியீட்டு மதிப்பெண்ணைப் பதிவு செய்தது. ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ள இந்தக் குறியீடு ஆயுட்காலம், கல்வி மற்றும் வாழ்க்கைத்தரம் போன்ற மனித மேம்பாட்டின் முக்கியப் பரிமாணங்களில் உள்ள சராசரி சாதனையின் சுருக்கமான அளவீடு ஆகும்.

பல்வேறு பொருளாதாரக் குறியீடுகளில் தமிழ்நாடு வலுவாக உள்ளது என்று தரவுகள் காட்டுகின்றன. தனிநபர் நிகர உள்நாட்டு உற்பத்தி (ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மாநிலத்தில் ஒரு தனிநபர் ஈட்டும் நிகர சராசரி வருமானம்) மற்றும் கிராமப்புறங்களில் உள்ள சராசரி தினக் கூலி விகிதங்கள் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட குறியீடுகளில், தமிழ்நாட்டின் புள்ளிவிவரங்கள் இந்தியாவின் சராசரியை விட மிகவும் அதிகமாக உள்ளன.

உண்மையில், கிராமப்புறங்களில் 573.2 என்ற சராசரி தினக்கூலி விகிதத்துடன், கேரளாவைத் தவிர மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டின் ஊதியங்கள் மிக அதிகமாக உள்ளன.

சமீபத்திய நிதி ஆணைய அறிக்கையின்படி, 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் கடன்மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி விகிதம் 29.9% ஆக இருந்தது. இருப்பினும், 2024-25 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதமான 11.9%, அனைத்து மாநிலங்களிலும் மிக உயர்ந்ததாக இருப்பதால், அதன் நிதிக் குறியீடுகளை மேம்படுத்த வாய்ப்புள்ளது.

சுகாதாரம் மற்றும் பெண்கள் தொடர்பான பல குறிகாட்டிகளில் மாநிலம் சிறப்பாகச் செயல்பட்டபோதிலும், சுகாதாரம் மற்றும் சுகாதாரத் திட்டப் பாதுகாப்பு போன்ற பகுதிகளில் பின்தங்கியுள்ளது (அட்டவணை 2). குழந்தைகள் மற்றும் பெண்கள் தொடர்பான பல சுகாதாரக் குறியீடுகளில் முதல் ஐந்து சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களில் இதுவும் ஒன்றாகும். நிதி ஆயோக்கின்படி, அதன் தாய் இறப்பு விகிதம் ஒரு லட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 54 ஆகும், இது 97 என்ற தேசிய சராசரியை விட மிகவும் குறைவு.

குழந்தைகள் தொடர்பான குறிகாட்டிகளிலும் இதேபோன்ற ஒரு போக்கைக் காண முடிகிறது. 2023 ஆம் ஆண்டு நிலவரப்படி, மாநிலத்தின் சிசு மரண விகிதம் ஆயிரம் குழந்தைகளுக்கு 12 ஆக உள்ளது, இது இந்தியாவின் சராசரி சிசு மரண விகிதத்தில் கிட்டத்தட்ட பாதியாகும். மேலும், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் வளர்ச்சி குன்றியவர்களின் பங்கு மிகக் குறைவாக உள்ள நான்காவது மாநிலமாகவும் இது திகழ்கிறது. அனைத்து அடிப்படைத் தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்ட குழந்தைகளின் பங்கைப் பொறுத்தவரை (சதவிகிதம்), இது இரண்டாவது இடத்தில் உள்ளது.

கல்வி தொடர்பான குறியீடுகளிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது தொடக்கக் கல்வியில் சரிசெய்யப்பட்ட நிகர சேர்க்கை விகிதத்தில் (ANER) சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களில் இம்மாநிலம் இடம்பிடித்துள்ளது. ANER என்பது, தொடக்கக் கல்விக்கான பள்ளி வயதுக் குழுவில் உள்ள மொத்த மக்கள்தொகையில், தொடக்க அல்லது இடைநிலைக் கல்வியில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையாகும்.

மாநிலங்களில், தமிழ்நாடு மூன்றாவது மிகக் குறைந்த இடைநிற்றல் விகிதத்தைக் கொண்டுள்ளது. மேலும், மேல்நிலைக் கல்வியில் மாநிலத்தின் மொத்த சேர்க்கை விகிதம் அகில இந்திய சராசரியை விட மிகவும் அதிகமாக உள்ளது.

---

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

## நேஷனல் ரிபப்ளிக் பார்ட்டி ஆப் இந்தியா ஆதரவு!

### தேசியத் தலைவர் ஜி.எல்.குப்தா அறிக்கை!

சென்னை, ஏப். 14-

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, தேசியத் தலைவர் ஜி.எல்.குப்தா தலைமையிலான நேஷனல் ரிபப்ளிக் பார்ட்டி ஆப் இந்தியா (NRPI) ’ ஆதரவு தெரிவித்துள்ளது.

“தேசியத் தலைவர் ஜி.எல். குப்தா தலைமையிலான நேஷனல் ரிபப்ளிக் பார்ட்டி ஆப் இந்தியா (NRPI) கட்சியின் மாநிலத் தலைவர் தேவேந்திரன் (எ) எ.எஸ்.தேவா அவர்கள், 13.04.2026 காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்களை நேரில் சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் முழு ஆதரவு அளிப்பதாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற தேசியத் தலைவர் ஜி.எல்.குப்தா தலைமையிலான நேஷனல் ரிபப்ளிக் பார்ட்டி ஆப் இந்தியா (NRPI) நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தார்.

---



## தி.மு.க. இளைஞர் அணி

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். நான்கு கட்ட பரப்புரை முடிந்த நிலையில் ஐந்தாம் கட்ட பரப்புரையை கன்னியாகுமரியில் இன்று (14–04–2026) தொடங்குகிறார். அதன் விவரம் வருமாறு:

**14.4.2026 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| மாலை 4.00 மணி | பத்மநாபபுரம் | வட்டாச்சியர் அலுவலகம் அருகே, தக்கலை. |
| மாலை 5.00 மணி | நாகர்கோவில் | வெட்டுர்னி மடம் ஜங்ஷன், நாகர்கோவில். |
| மாலை 6.30 மணி | அம்பாசமுத்திரம் | கல்யாணி திரையரங்கம் முன்பு, அம்பாசமுத்திரம். |
| இரவு 8.00 மணி | பாளையங்கோட்டை | மார்க்கெட், ஜவஹர் மைதானம் அருகில், பாளையங்கோட்டை. |
| இரவு 9.00 மணி | திருநெல்வேலி | வாகையடி முனை, திருநெல்வேலி. |

**15.4.2026 புதன்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | ஒட்டப்பிடாரம் | தேரடி சந்திப்பு, ஒட்டப்பிடாரம். |
| காலை 11.00 மணி | கோவில்பட்டி | மஹாராஜா டீ ஸ்டால் பிரதான சாலை, கயத்தாறு. |
| மாலை 4.00 மணி | வாசுதேவநல்லூர் | காமராஜர் சிலை முன்பு, புளியங்குடி. |
| மாலை 5.30 மணி | ஸ்ரீவில்லிபுத்தூர் | ஆண்டாள் கோயில் தேரடி வீதி, ஸ்ரீவில்லிபுத்தூர் |
| மாலை 6.30 மணி | சாத்தூர் | ஆலங்குளம் TBC முக்கு சாலை, சாத்தூர். |
| இரவு 8.00 மணி | விருதுநகர் | எம்.ஜி.ஆர் சிலை முன்பு, விருதுநகர். |
| இரவு 9.00 மணி | திருமங்கலம் | தேவர் சிலை அருகில், திருமங்கலம். |

**16.4.2026 வியாழக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | ஆண்டிப்பட்டி | பேருந்து நிலையம் அருகில், ஆண்டிப்பட்டி. |
| காலை 11.00 மணி | பெரியகுளம் | புதிய பேருந்து நிலையம் பிரிவு, உட்லண்ட்ஸ் ஹோட்டல் அருகில், பெரியகுளம். |
| மாலை 3.30 மணி | வேடசந்தூர் | ஆத்துமேடு, வேடசந்தூர் |
| மாலை 4.30 மணி | திண்டுக்கல் | நாகல் நகர், திண்டுக்கல். |
| மாலை 5.30 மணி | சோழவந்தான் | பேருந்து நிலையம் அருகில், அலங்காநல்லூர். |
| இரவு 7.00 மணி | மதுரை வடக்கு | புதூர் பேருந்து நிலையம் அருகில், மதுரை. |
| இரவு 8.00 மணி | மதுரை கிழக்கு | வண்டியூர், சௌராஷ்டிராபுரம், மதுரை. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை - 18
நாள் : 13.4.2026

கலைஞர் 100 1924 - 2023



---



## காவிப் பொய்களைக் கடை விரித்து, மத வாத வெறுப்பு அரசியலை விதைத்துச் சுகம்காணத் துடிக்கும் NDA– அதன் அடிவருடிகளை அப்புறப்படுத்துவோம்;

## யாரையும் பின்தங்க அனுமதிக்காமல், அனைவரையும் முன்னேற்ற அனுதினமும் பாடுபடும் ஸ்டாலின் வெற்றிக்கு அயராது உழைப்போம்!